குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு
**முன்னிலை**: திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்,B.B.A.LLB.(Hons),
குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.
2026-ம் ஆண்டு மே மாதம் 05-ம் நாள் செவ்வாய்கிழமை

**DVC No.01/2023**

**CNR No.TNDP05000582-2023**

M.மங்கம்மாள் (வயது 26)
க/பெ. மாரிமுத்து,
க.எண்.2/474 வீராசனூர் கிராமம்,
பாலக்கோடு தாலுக்கா,
தருமபுரி மாவட்டம். .... மனுதாரர்

/இடையே/

1. மாரிமுத்து (வயது 33)
த/பெ. கண்ணு.
2. கண்ணு (வயது 60)
த/பெ. வெங்கட்ராமன்.
3. லட்சுமி (வயது 58)
க/பெ. கண்ணு
4. மாரியப்பன்(வயது 40)
கண்ணு

**1 முதல் 4 எதிர்மனுதாரர்களின் முகவரி**
பனந்தோப்பு கிராமம்,
M.சவுளூர், மிட்டஅள்ளி,
கிருஷ்ணகிரி மாவட்டம் ...... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 09.03.2023-ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:02 +0530

மனுதாரர் சார்பில் வழக்கறிஞர்கள் திரு.G.கார்த்திகேயன்,B.Sc.,B.L., மற்றும் திரு.N.சிலம்பரசன்,M.Sc.,B.L., ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சின்னதம்பிB.Sc.,LLB.,PGDCo.M., அவர்கள் ஆஜராகியும், இருதப்பு வாதங்கள், வழக்காணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

1) மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்ட பிரிவு 18–ன் கீழ் பாதுகாப்பு கட்டளை, பிரிவு 19–ன் கீழ் வசிப்பிட கட்டளை, பிரிவு 20–ன் கீழ் பண உதவி கட்டளை, பிரிவு 22–ன் கீழ் இழப்பீட்டு கட்டளை வழங்கு கேட்டு மேற்படி சட்டத்தின் பிரிவு 12–ன் கீழ் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) **மனுதாரர் மனுவின் சுருக்கம்:–**

i) மனுதாரரும், 1–ம் எதிர்மனுதாரரும் கணவன் மனைவி ஆவார்கள் எனவும், மனுதாரரும், 1–ம் எதிர்மனுதாரரும் கடந்த 30.05.2018–ம் தேதி அன்று பிக்கனஅள்ளியில் உள்ள சென்றாயசாமி கோயிலில் இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் இந்து முறைப்படி திருமணம் நடந்தது எனவும் திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர்கள் சீர்வரிசையாக 20 பவுன் நகையும் மற்றும் பீரோ, கட்டில் உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்களையும் 1–ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்தனர் எனவும், திருமணத்திற்கான மொத்த செலவையும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க மனுதாரரின் பெற்றோர்களே ஏற்றுக்கொண்டார்கள் எனவும், திருமணத்தின் போது எதிர்மனுதாரர் பெங்களூரில் உள்ள தனியார் கம்பெனியில் Facility Engineer ஆக பணிபுரிந்தார் எனவும், அதேபோல் மனுதாரர் B.Sc முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி படிப்பை படிப்பதற்காக இருந்தபோது எதிர்மனுதாரரும் அவரது பெற்றோர்களும் தாங்களே மனுதாரரை மேற்கொண்டு படிக்க வைப்பதாக கூறி வாக்குறுதி கொடுத்து வற்புறுத்தி பெண் கேட்டு திருமணம் செய்துகொண்டார்கள் எனவும்,

ii) மனுதாரரின் திருமண விழாவின் போது மனுதாரரின் பெற்றோர்களையும் உறவினர்களையும் எந்தவொரு திருமண சடங்கையும் செய்யவிடாமல், காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த அரசு மருத்துவமனையில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:10 +0530

செவிலியராக பணிபுரியும் திலகவதி (வயது 42) என்ற பெண் தன்னை முன்னிலைப்படுத்தி கொண்டு தொந்தரவு செய்துவந்தார். மேற்படி பெண் குறித்து மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரரிடம் கேட்டபொழுது, அந்த பெண் 1-ம் எதிர்மனுதாரரின் நெருங்கிய நண்பர் என்று கூறிகொண்டு திருமண வேளையிலே. 1-ம் எதிர்மனுதாரர் மேற்படி திலகவதி உடன் இயல்புக்கு மாறான நிலையில் கட்டிப்பிடித்து கொண்டு புகைப்படத்தை எடுத்துகொண்டார். அப்பொழுது 1-ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் 1-ம் எதிர்மனுதாரரின் நடத்தையை கண்டிக்காமல் மாறாக 1-ம் எதிர்மனுதாரரின் மேற்படி செயலுக்கு ஆட்சேபணை தெரிவித்த மனுதாரரின் பெற்றோருடன் சண்டையிட்டார் எனவும்,

iii) பின்னிட்டு மனுதாரருக்கும் 1-ம் எதிர்மனுதாரருக்கும் 12.05.2020 அன்று ஜானுஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு பிரசவ செலவு முதலான மருத்துவ செலவுகளை மனுதாரரின் பெற்றோர்களே செய்தனர். திருமணநாள் முதல் குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டும், இந்த 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு தேவையான உணவு. உடை. மருத்துவம் முதலான எந்த செலவையும் செய்யாமல் இருந்து வந்தார். மனுதாரர் மற்றும் அவரது குழந்தைக்கு தேவையான அரிசி முதலான மளிகை பொருட்கள் முதற்கொண்டு அத்தியவாசியமான பொருட்கள் குழந்தை வளர்ப்புக்கு தேவையான மற்றும் மருத்துவ செலவுகளையும், குழந்தை வளர்ப்புக்கு தேவையான அனைத்து பொருட்களையும் மனுதாரரின் தந்தையே செய்துவந்தார் எனவும், திருமணத்திற்கு எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோரிடம் திருமணத்தின்போது ஒப்புக்கொண்டபடி மனுதாரரை, ஆசிரியர் பயிற்சி படிக்க அனுமதிக்கவில்லை. மாறாக மனுதாரரின் பெற்றோரிடம் திருமணத்திற்காக மட்டுமே ஒரு பொய்யான வாக்குறுதி அளித்ததாக கூறி மனுதாரருக்கு ஏமாற்றத்தையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தினார் எனவும், மேலும் எதிர்மனுதாரர்களை மீறி படிக்கவேண்டுமென்று நினைத்தாலோ. பேசினாலோ வாழவெட்டியாக மனுதாரரை அவரது பெற்றோரிடமே அனுப்பி விடுவதாக மிரட்டினார்கள்.

iv) அதைத்தொடர்ந்து மார்ச் மாதம் 2019-ஆம் தேதி மனுதாரர் ஆசிரியர் பயிற்சி படிப்பிற்காக மனுதாரருக்கு அவரது தந்தை ரூ.85,000 வழங்கினார். மனுதாரர் எதிர்மனுதாரரை உடன் அழைத்து கொண்டு தருமபுரியில் உள்ள 'ஸ்ரீ லட்சுமி நாராயணா கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி படிப்பிற்கு அட்மிசன் செய்துவிட்டு, வீடு திரும்பும் போது 1-ம் எதிர்மனுதாரர்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:17 +0530

எதிரில் வந்த பெண்ணைப் பார்த்து அவள் மிகவும் அழகாகவும், கட்டழகுடனும் இருப்பதாகவும், அவள் போன்று மனுதாரர் இல்லையென்று கூறி ஆபாச வார்த்தைகளால் திட்டியதால், மனுதாரருக்கும் 1-ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதத்தால். 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரரை கண்மூடித்தனமாக அடித்ததனால், முகம் மற்றும் உடல் முழுவதும் பல்வேறு ரத்த காயங்களுடன் சம்பவ இடத்திலே மயங்கி விழுந்துவிட்டார். ஆனால் 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிக்காமல் மனுதாரரை 1-ம் எதிர்மனுதாரர் சம்பவ இடத்திலே விட்டுவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார் எனவும், மேலும் சம்பவ இடத்தில் இருந்த அக்கம்பக்கத்தினரே மனுதாரரை மீட்டு முதலுதவி செய்து மனுதாரரின் பெற்றோருக்கு தகவல் கொடுக்கப்பட்டு மனுதாரருக்கு காவேரிப்பட்டணம் 'சண்முகா மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

v) அதைத்தொடர்ந்து 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் பெற்றோர்களிடம் இனி முதற்கொண்டு மனுதாரரிடம் சண்டையிடாமல் அடிக்காமல் நன்றாக பாரத்துக்கொள்வேன் என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வேலை நிமித்தமாக நயவஞ்சகமாக அழைத்ததன் பேரில் மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரருடன் பெங்களூர் செல்ல இருப்பதால், மனுதாரரை அனுப்பி வைக்கும் படி 2019-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பெங்களூருக்கு சென்றார். ஆனால் ஒவ்வொரு முறையும் 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் மற்ற பெண்களைப் போல் அழகாக இல்லை என்பதாலும், அதனால் 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லை என்று கூறி தெரிவிக்கவே. மனுதாரரை பெற்றோர் வீட்டிற்கே செல்லும்படி வற்புறுத்தியதால், மனுதாரர் மறுப்பு 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சண்டையிட்டு, கடுமையாக தாக்கியதில் மனுதாரர் வலி தாங்க முடியாமல் வீட்டின் மேல்புறத்தில் இருந்து கீழே இறங்கி சென்றபோது "எங்கே ஓடுகிறாய் தேவிடியா நில்லுடி உன்னை கொன்றுவிட்டு நா வேற பொண்ணை கல்யாணம் செய்துகொள்கிறேன்" என்று கூறியவாறே மனுதாரர் கர்ப்பிணியாக இருந்ததை எண்ணிப்பாராமல் துரத்தி வந்து, மனுதாரர் அணிந்திருந்த துப்பட்டாவை கழுத்தில் சுற்றி மனுதாரரை தரதரவென்று கீழிருந்து மேலாக முதல் மாடியில் உள்ள வீட்டிற்கு 1-ம் எதிர்மனுதாரர் இழுத்துசென்றதில், மனுதாரருக்கு குரல்வளை நசுக்கப்பட்டு மூச்சு விடுவதற்கே சிரமப்பட்டு அவதிப்பட்டு வந்தார். பின்னிட்டு மனுதாரர் அவருடைய தந்தைக்கு போன் மூலம் தகவல் கொடுக்கப்பட்டு, மறுநாள் மனுதாரரை அவரது தந்தை மீட்டு செல்வதற்காக வந்திருந்தபோது, 1-ம்

எதிர்மனுதாரர் மனுதாரரின் தந்தையிடம் மனுதாரர் எந்தவொரு அழகும் இல்லை எனவும், விஷம் வைத்து கொண்றுவிடுங்கள் என்று கூறி, மனுதாரரின் தந்தைக்கு மிகுந்த மனஉளைச்சலையும், துயரத்தையும் ஏற்படுத்தினார்.

vi) மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரரின் தொடர்ச்சியான சித்தரவதையை எண்ணி மனஉளைச்சல் ஏற்பட்டு வீட்டில் இருந்த பூச்சி மருந்தை குடித்து தற்கொலைக்கு முயன்றார் பின்னிட்டு மனுதாரரின் பெற்றோர்கள் மனுதாரரை மீட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து காப்பாற்றினார் எனவும், 1ம் எதிர்மனுதாரரின் கொடூர செயலால் மனுதாரர் விஷம் குடித்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் இருப்பதை,1–ம் எதிர்மனுதாரரிடம் கூறியபோது. அவள் இன்னும் சாகவில்லையா' என்று மனம் நொருங்கும் படி பேசி மனஉளைச்சலை ஏற்படுத்தினார். இறுதிவரை மனுதாரரை பார்க்க 1–ம் எதிர்மனுதாரர் வரவில்லை. அவரது பெற்றோர்களின் தூண்டுதலின் பேரில் மனுதாரர் மீண்டும் 1–ம் எதிர்மனுதாரருடன் வாழ வேண்டுமென்றால் அவர் வீடு கட்டுவதற்கு ரூ.15 லட்சம் கொடுத்தால் மட்டுமே மீண்டும் சேர்ந்து வாழ விரும்பவதாகவும். இல்லையென்றால் மனுதாரருடன் வாழ விரும்பவில்லை என்றும் கூறிவிட்டார். 1–ம் எதிர்மனுதாரர் அவர்களது பெற்றோர்களின் தூண்டுதலினால் மனுதாரரை கொடுமைப்படுத்துவதால் நடவடிக்கை எடுக்க கோரி 24.11.2019 ஆம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையம் கிருஷ்ணகிரியில் மனுதாரர் புகார் அளிக்கப்பட்டது.

vii) மேலும் புகாரின் மீது விசாரணை மேற்கொண்டு, 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர் இடையே சமாதானம் ஏற்பட்டு மனுதாரர் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்காக, 1–ம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்ற போது 1–ம் எதிர்மனுதார் மீதும், அவரது குடும்பத்தார் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மனுதாரர் அவர்களை அவமானப்படுத்திவிட்டதாகவும், அதனால் எக்காரணத்தை கொண்டும் மனுதாரை மனைவியாக ஏற்றுகொள்ள மாட்டேன் என்று கூறினார். பின்னிட்டு மனுதாரர் கருவுற்று 7 மாத கால காப்பிணி பெண்ணாக இருந்தபேது 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் கருவை கலைத்துவிடுமாறு கூறி மனுதாரரை கடுமையாக தாக்கினார். இதனால் மனுதாரரின் உடல் மிகவும் பலவீனப்பட்டு உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரரை சிகிச்சைக்கு அழைத்து செல்ல மறுத்துவிட்டார். பின்னிட்டு மனுதாரரின தந்தைக்கு தகவல் கொடுக்கப்பட்டு மனுதாரரை மீட்டு மருத்துவமனையில் சோத்து

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:29 +0530

சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் மனுதாரர் மாவட்ட காவல்கண்காணிப்பாளர் கிருஷ்ணகிரியில் புகார் அளித்ததனால் அப்புகாரை ஆள்வரைக்கு உட்பட்ட மகேந்திரமங்கலம் காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. அந்த விசாரணையில் 1–ம் எதிர்மனுதாரரின் குடும்பத்தார் காவல்நிலையத்திலேயே மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தாருடன் தகராறு செய்து மிரட்டிச்சென்றனர். மேற்படி அனைத்து சங்கதிகளையும் மறைத்து 1–ம் எதிர்மனுதாரர் தீயஎண்ணத்துடன் வேண்டுமென்றே மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுப்பதாகவும், மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரர் மீது பொய்யான புகார்களை காவல்நிலையத்தில் கொடுத்துவருதாகவும் பொய்யான சங்கதிகளை கூறி 1–ம் எதிர்மனுதாரர் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை மீட்டமைவு கோரி மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவை எந்தவொரு காரணமும் இன்றி 1–ம் எதிர்மனுதாரரே திரும்பபெற்றுக்கொண்டார் எனவும்,

viii) அதைத் தொடர்ந்து கடந்த 22.10.2021 மனுதாரருக்கும் 1–ம் எதிர்மனுதாரருக்கும் லித்திஸ் என்ற ஆண் குழந்தை பிறந்தது எனவும், கடந்த 05.12.2021 தேதி அன்று மதியம் 12 மணியளவில் 1–ம் எதிர்மனுதாரர் மனுதாரர் வீட்டிற்கு வந்து, மனுதாரர் உயிருடன் இருந்தால், மேற்படி திலகவதி உடன் வாழ முடியாது என்று கூறி மனுதாரரை தாக்கி, கழுத்தை இறுக்கினார். மனுதாரர் அவரின் பிடியில் இருந்து தப்பிக்க முயற்சித்தபோது 1–ம் எதிர்மனுதாரர், மனுதாரரின் 2–வது குழந்தை லித்திஸ்–ஐ அடித்து கொன்றுவிடுவதாக கூறி, பச்சிளம் குழந்தை என்று கூட பொருட்படுத்தாமல், குழந்தையின் ஒரு கையை மட்டும் பிடித்து நீண்ட தூரம் தரதரவென்று தொங்கியபடி இழுத்து சென்றார். இதனால் குழந்தை தோள் பட்டை வலி தாங்காமல் கத்தியதால்,"உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு 2 வது குழந்தை லித்திஸயை தெருவில் வீசி சென்றுவிட்டார் எனவும்,

ix) மனுதாரருக்கும் 1–ம் எதிர்மனுதாரருக்கும் அறிவுறுத்தியதனபேரில் மனுதாரர் எதிர்மனுதாரருடன் மீண்டும் சேர்ந்து வாழ சம்மதித்த அப்பொழுது 1–ம் எதிர்மனுதாரர் திடீரென்று பணப்பிரச்சனை ஏற்பட்டதாகவும், அதற்காக மனுதாரருக்கு திருமணத்தின் போது சீர்வரிசையாக கொடுத்த நகைகளை காவேரிப்பட்டணம் இந்திய வங்கி கிளையில், 9 பவுன் நகைகளை மனுதாரர் பெயரிலும், மீதமுள்ள மனுதாரரின் 11 பவுன் நகையை இரண்டாம் எதிர்மனுதாரர் பெயரிலும் அடகு வைத்து எதிர்மனுதாரர் பணத்தை பெற்றுக்கொண்டார் எனவும்,

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:34 +0530

x) 1–ம் எதிர்மனுதாரர் திலகவதி என்பவருடன் மனுதாரருக்கு தெரியாமல் ஊர் சுற்றிகொண்டும் காஞ்சிபுரம் சென்று மேற்படி பெண்னுடன் தவறான உறவு கொண்டும் 1–ம் எதிர்மனுதாரர் மேற்படி திலகவதியுடன் பேசிக்கொண்டும், மனுதாரருக்கு தொடர்ந்து மன உளைச்சலை ஏற்படுத்தினார் எனவும், இது சம்மந்தமாக மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரரிடம் மேற்படி திலகவதிவுடன் உள்ள பழக்கத்தை 1–ம் எதிர்மனுதாரர் அடிக்கடி விட்டுவிடும்படியும் வேண்டினார். ஆனால் திலகவதியுடன் உள்ள உறவை முறித்துகொள்ள மறுத்துவிட்டார். 1–ம் எதிர்மனுதாரர் திருமண நாள் முதலே மேற்படி திலகவதியுடன் எந்த நேரமும் பேனில் பேசிக்கொண்டும் வேலை விசயமாக வெளியூர் செல்வதாக பொய் சொல்லி மேற்படி திலகவதியை சந்திக்க காஞ்சிபுரம் சென்றுவிடுவார் எனவும், எதிர்மனுதாரரின் இந்த செயல் குறித்து 1–ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் மற்றும் அண்ணன் மாரியப்பன் ஆகியோர்களிடம் தெரிவிக்க 1–ம் எதிர்மனுதாரரின் செயலை கண்டிக்காமல் எப்போதும் ஆதரித்தே வந்தார்கள் எனவும்,

xi) 1–ம் எதிர்மனுதாரரின் நடத்தையை கண்டிக்காமல் மாறாக, 1–ம் எதிர்மனுதாரருடன் 2, 3 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் சேர்ந்து மனுதாரரை தாக்கியும், மேலும் 4–வது எதிர்மனுதாரர் மனுதாரரிடம் "என் தம்பி ஆம்பள, அவன் அயிரம் பொண்னுடன் கூட வாழுவான் என்றும், உனக்கு விருப்பம் இருந்தா வாழு இல்லையின்னா உன் வீட்டிக்கு போயிரு, அவனுக்கு நீயும் ஒரு வப்பாட்டி தான் சும்மா கேள்விகேட்டா கொன்றுவிடுவேன் என்றும் மனுதாரரை மிரட்டினார். மனுதாரரின் வருங்கால இல்வாழ்க்கை பாழடைந்ததை தாங்கமுடியாமல் 1–ம் எதிர்மனுதாரர் மேற்படி திலகவதி உடன் உள்ள உறவை முறித்துகொள்ள வேண்டும் என்று மனுதாரர் கூறியதற்கு 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் தந்தை தாய் மற்றம் அண்ணன் ஆகியோர்கள் சேர்ந்து மனுதாரரை அடித்து வீட்டைவிட்டு துரத்திவிட்டார்கள்.

xii) மனுதாரர் திருமண நாள் முதலே 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் குடும்பத்தாரர்கள் மனுதாரரை ஆபாசவார்த்தைகளால் திட்டியும், மனுதாரை அடித்து சித்தரவதை செய்து உடலளவிலும் பல்வேறு காயங்களையும் கஷ்டங்களையும் ஏற்படுத்தியும், மனுதாரருக்கு உணவு, உடை ஏதுமின்றியும், அதேபோல் குழந்தைக்கு தேவையான மருத்துவ செலவுகளை கூட செய்ய மறுத்து பச்சிளம் குழந்தைகளை அடித்து

AJAY VIKRESH KUMAR G  Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.05.05 06:33:41 +0530

பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கியுள்ளார்கள் எனவும்,

xiii) 1-ம் எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் மனுதாரரையும், தந்தை என்ற முறையில் குழந்தைகளையும் பராமரித்து அவர்களுக்கு தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளை செய்து கொடுப்பது 1-ம் எதிர்மனுதாரின் தலையாய கடமையாகும் ஆனால் 1-ம் எதிர்மனுதாரர் மேற்படி திலகவதி உடன் தகாத உறவை வைத்துக்கொண்டு சம்பாதிக்கும் பணத்தை கண்மூடித்தனமாக செலவு செவ்து கொண்டு மனுதாரரையும், குழந்தைகளையும் பராமரிக்காமல் இருந்துவருகிறார் எனவும், மனுதாரர் தற்போது அவர்களது பெற்றோரின் வீட்டில் வசித்தும், குழந்தைகளை பராமரிக்கவும் மருத்துவ செலவுகளை கவனிக்கவும் மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் எனவும், எனவே குடும்பவ வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005- கீழ் மனுதாரருக்கு மாதந்தோரும் உணவு, உடை, மருத்துவம், வீட்டுசெலவுகள் மற்றும் இதர செலவுகளுக்காகவும் மனுதாரருக்கு மருத்து உதவிகளுக்கும் மற்றும் மனுதாரரை துன்புறுத்தியதற்காகவும், வரதட்சனை கொடுமை செய்ததற்காககவும் எதிர்மனுதாரர் மீது உரிய நடவடிக்கையும், நஷ்ட ஈடு கோரியும் மற்றும் ஜுவனாம்சம் கோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 2 முதல் 4எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

i) மனுதாரருக்கும், 1-ம் எதிர்மனுதாரருக்கும் இரண்டு பெற்றோர்கள் மற்றும் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைப்பெற்றது என்பது உண்மையாகும். மேலும், திருமணத்தின் போது மனுதாரருக்கு 20-பவுன் நகை போட்டதாக தெரிவித்துள்ள சங்கதி பொய் எனவும், மனுதாரருக்கு அவருடைய பெற்றோர்கள் போட்ட 15-பவுன் தங்க நகைகளை 1-ம் எதிர்மனுதாரர் மீது, கிருஷ்ணகிரி - அனைத்து மகனிர் காவல் நிலைத்தில், 2019-ம் வருடம் நவம்பர் மாதம் 2-வது வாரத்தில் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக புகார் மனு கொடுத்துள்ளதை மேற்படி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் மனுதாரரை விசாரணை செய்யும் போது, அவருடைய 15-பவுண் தங்க நகைகளை மனுதாரரின் சித்தப்பா சரவணன் மற்றும் ஊர் கவுண்டர் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். மேலும், வரதட்சணையாக 1-ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த இரு சக்கர வாகனத்தையும், மனுதாரரின் தந்தையே

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:47 +0530

எடுத்துக்கொண்டார். திருமண செலவுகளை 1-ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க மனுதாரரின் பெற்றோர்களே ஏற்றுக்கொண்டார்கள் என்பது, முற்றிலும் பொய்யான சங்கதிகள் என்றும், பெரும்பாலும் வன்னியர் சமூதாயத்தில் மாப்பிள்ளை தரப்பில் தான், திருமண செலவுகளை மணமகன் பெற்றோர்கள் தான் செலவு செய்து இந்து சமூதாயத்தின் வழிமுறையாகும். அதன்படி, திருமண செலவுகளை 1-ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் செலவு செய்து வந்தார்கள். மேலும், மனுதாரரின் பீரோ, கட்டில் மற்றும் வீட்டு உபயோக பொருள்கள் 1-ம் எதிர்மனுதாரர் வீட்டில் உள்ளது எனவும்,

ii) மேலும், மனுதாரர் எதிர்மனுதாரர்களுடன் கூட்டுக்குடும்பமாக 6-மாதங்கள் வரைதான் வாழ்ந்து வந்தார் என்பது உண்மையாகும். மேலும், 1-ம் எதிர்மனுதாரர் பெங்களூரில் சொடக்சோ என்ற தனியார் நிறுவனத்தில் திருமணத்திற்கு முன்பு 3 வருட காலமாக வேலை செய்து வந்தார் எனவும், திருமணத்திற்கு பிறகு மனுதாரரை எதிர்மனுதாரரின் குடும்பத்தார்கள் பி.எட்., பட்ட படிப்பு படிக்க வைத்தார்கள். மேலும், மனுதாரரை 1-ம் எதிர்மனுதாரர் பெங்களூருக்கு அழைத்து செல்லாவிடில், சூசைடு செய்து கொள்கிறேன் என்று 1-ம் எதிர்மனுதாரரை மனுதாரர் மிரட்டி வந்தார். அதனால், 1-ம் எதிர்மனுதாரர் மனுதாரரை பெங்களூருக்கு அழைத்து சென்று 3 மாதங்கள் குடியிருந்து வந்தார்கள். மேலும், திருமணத்தின் போது, மனுதாரரின் பெற்றோர்களையும், உறவினர்களையும் எந்த ஒரு திருமண சடங்கையும் செய்யவிடாமல், காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்த திருமதி. திலகவதி வயது சுமார் 42 என்ற பெண் முன்னிலைப்படுத்தி கொண்டு, தொந்தரவு செய்து வந்ததாக மனுதாரர் கூறுவது, பொய்யான சங்கதிகள் ஆகும்

iii) மேலும், 1-ம் எதிர்மனுதாரர் மேற்படி திருமதி. திலகவதி என்பவர் நர்சுஸ் பணியில் இருந்த போது, 1-ம் எதிர்மனுதாரருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு காய்ச்சல் அதிகமாகி விட்டதால், பண்ருட்டி அரசு மருத்துவமனையில் மேற்படி திலகவதி என்பவரை தாய் சானத்தில் கருதி, 1-ம் எதிர்மனுதாரர் காய்ச்சலுக்கு பயந்து அழுந்து விட்டதால், பயப்பட வேண்டாம் சிகிச்சை பெற்றுக்கொள், எந்த ஒரு தொந்தரவும் வராது 'என்று, மருத்துவரிடம் பேசி நல்ல முறையில் சிகிச்சையளித்து காப்பாற்றியுள்ளார். அந்த விசுவாதத்தை வைத்து, 1-ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு அழைத்ததால், மேற்படி செவிலியர் திருமதி. திலகவதி தாய் போல் காப்பாற்றியதால், திருணமத்திற்கு வந்து போனார். ஆனால், மனுதாரரும்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:53 +0530

குற்றச்சாட்டுகள் வரம்பு மீறிக்கொண்டு, மனுவில் தெரிவித்திருக்கும் சங்கதியானது, இயல்புக்கு மாறான சங்கதியானது, 1–ம் எதிர்மனுதாரர் தாய் என்ற முறையில் மதித்தவரை, கட்டிப்பிடித்துக்கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டதாக மனுதாரர் கூறும் குற்றச்சாட்டுக்கு, 1–ம் எதிர்மனுதாரரும், மேற்படி தாய் போல் நினைக்கும் நர்சஸ் திருமதி, திலகவதி தாய் என்ற முறையில் கட்டிபிடித்தாக கூறும், மனுதாரர் அந்த புகைப்படத்தினை வழக்கிற்கு ஆவணமாக ஏன் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் அனைத்து காவல் நிலையத்திற்கு சென்று புகாரினை ஆவணமாக தாக்கல் செய்யும் மனுதாரர், மேற்படி 1–ம் எதிர்மனுதாரர் கட்டிப்பித்துக்கொண்டதாக கூறும் புகைப்படத்தினை இம்மனுவில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை எனவும்,

iv) மனுதாரருக்கு 2–குழந்தைகளுக்கு பிறகும், 1–ம் எதிர்மனுதாரிடம் நடந்துகொள்ள பக்குவம் இல்லாமலும், குழந்தைகளை பார்க்க விடாமல் தடுத்து வருவதும், 1–ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களான 2, 3 எதிர்மனுதாரர்கள் மீது வீண் பழி சுமத்துவதால், 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு வயதான காலத்தில் பேரக்குழந்தைகளுக்கு பார்ப்பதற்கு கூட அனுமதிக்காமல் இருந்துவந்தார் எனவும் மேலும், 1–ம் எதிர்மனுதாரரின் வயதான பெற்றோர்களை இம்மனுவில் சேர்த்து, அவர்களுக்கு தொல்லை கொடுத்து வருகிறார் எனவும், உணவு, உடை மற்றும் மருத்துவம் செலவுகள், தேவையான பொருள்கள் வாங்கி கொடுக்கும் அளவிற்கு, வரம்பு மீறி, மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது வீண் பழி சுமத்தி வருகிறார் எனவும்,

v) மேலும், மேற்படி .திலகவதியை 1–ம் எதிர்மனுதாரர் தாய் போல் கருதுகிறார் தவிர, அவர்களுக்குள் எந்த ஒரு தவறான பழக்கமும் இல்லை எனவும், மனுதாரரை திருமணம் செய்த நாள் முதல் எதிர்மனுதாரர்கள் அனைவரும் ஆபாச வார்த்தைகளாலும், கொடுஞ்சொற்களினாலும், மனுதாரரை அடித்து சித்தரவதை செய்து உடனளவிலும், பல்வேறு காயங்களை ஏற்படுத்திவிட்டதாக மனுதாரர் கூறுவது முற்றிலும் பொய்யான சங்கதிகள் ஆகும் எனவும், எதிர்மனுதாரர் ஏதோ கிடைக்கும் தின கூலிக்கு சென்று கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார், மனுதாரரே தானாகவே எதிர்மனுதாரர்கள் வீட்டை விட்டு சென்று விட்டதால் ஜீவனாம்சம் பெற தகுதி இல்லாதவர் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரர் தரப்பில் திருமதி.மங்கம்மாள், ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:33:58 +0530

ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், மனுதாரர் தரப்பில் கிருஷ்ணகிரி, அனைத்து மகளிர் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.ஜானகிதேவி ம.சா.2 ஆகவும், கிருஷ்ணகிரி, சரஸ்வதி மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரி திரு.சபரி, ம.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.18 முதல் ம.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1-ம் எதிர்மனுதாரர் திரு.மாரிமுத்து எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.20 மற்றும் ம.சா.ஆ.21 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.கண்ணு எ.ம.சா.2 ஆகவும், திரு. மாரியப்பன் எ.ம.சா.3 ஆகவும், திரு.திருப்பதி எ.ம.சா.4 ஆகவும், விசாரிக்கப்பட்டுள்ளது. அவர்களது தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.

6) **தற்போது தீர்மானிக்க வேண்டிய சங்கதி யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்படத்தக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு</u>**

i) வழக்கில் இருதரப்பிலும் 1-வது மனுதாரருக்கும் 1-ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட திருமணத்தை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் மேற்படி திருமணத்தின் பயனாக இளவர் ஜானுஸ்ரீ, லத்தீஷ் ஆகிய இரண்டு குழந்தைகள் மனுதாரருக்கும் 1-ம் எதிர்மனுதாரராக்கும் பிறந்ததாக இருதரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். மேலும் மனுதாரர் தரப்பில் மனுதாரர் மற்றும் 1-ம் எதிர்மனுத்தாரிடையே நடைபெற்ற திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும் இளவர் ஜானுஸ்ரீ, லத்தீஷ் பிறப்பு சான்றிதழ்கள் ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்கள் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) மனுதாரர் 1-ம் எதிர்மனுதாரர் திருமணத்தின் போது திலகவதி என்று பெண்ணை நண்பர் என கூறிக்கொண்டு அந்த பெண்ணுடன் இயல்பிற்கு மாறான நிலையில் புகைப்படம் எடுத்துக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 1-ம் எதிர்மனுதாரர் திலகவதி என்ற நபருடன் தகாத

AJAY VIKRESH KUMAR G Digitally signed by AJAY VIKRESH KUMAR G Date: 2026.05.05 06:34:04 +0530

உறவு உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளர். 1–ம் எதிர்மனுதாரரும் திலகவதி என்ற நபரும் பேசிக்கொண்ட கைபேசி CONTACT HISTORY 1–ம் எதிர்மனுதாரரின் கைபேசியில் எடுக்கப்பட்டதாக ம.சா.ஆ.17 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மேற்படி ஆவணத்தில் உள்ள கைபேசி எண் திலகவதி என்பவருக்கு சொந்தமானது என நிரூபிக்கப்படவில்லை. மேலும் மேற்படி ஆவணத்தில் உள்ள அழைப்பு பதிவுகள் 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் திலகவதி என்பவருக்கு இடையே ஏற்பட்டது என நிரூபிக்கப்படவில்லை. எனவே மேற்பட்டு உறவு சம்பந்தமாக சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

iii) மேலும் 2019 ஆம் தேதி மார்ச் மாதம் 1–ம் எதிர்மனுதாரர், மனுதாரர் அழகாக இல்லை என ஆபாசமான வார்த்தைகளால் திட்டி கண்முடித்தனமாக அடித்து முகம் மற்றும் உடல் முழுவதும் ரத்த காயங்கள் ஏற்படுத்தினார் எனவும், பின்னர் 2019 ஆண்டு ஏப்ரல் மாதம் பெங்களூரு 1–ம் எதிர்மனுதாரருடன் சென்றதாகவும் அங்கும் 1–ம் எதிர்மனுதாரர் மற்ற பெண்கள் போல் அழகாக இல்லை என கூறி மனுதாரரை தாக்கியதிகாவும் வலிதாங்க முடியாமல் வீட்டின் முன்புறத்தில் இருந்து கீழே சென்றபோது உன்னை கொன்றுவிட்டு வேறு பெண்ணை திருமணம் செய்துகொள்வதாக கூறிக்கொண்டு கழுத்தில் அணிதிருந்த துப்பட்டாவை தரதரவென இழுத்து சென்றார் எனவும் அதனால் மனுதாரர் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும். அதன் பிறகு சேர்ந்து வாழ 15 லட்சம் கொடுத்தால் மட்டுமே மீண்டும் சேர்ந்து வாழ்வதாக 1–ம் எதிர்மனுதாரர் கூறியதாகவும் இது சம்பந்தமாக அனைத்து மகளிர் காவல் நிலையம் கிருஷ்ணகிரியில் மனுதாரர் புகார் அளித்தார் எனவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார் மனு மற்றும் மனு ரசீது எண்.297/2019 அனைத்து மகளிர் காவல் நிலையம் கிருஷ்ணகிரி ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் வரதட்சணை சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டு CSR.No.297/2019 வழங்கப்பட்டது என ம.சா.2 சாட்சியத்தின் படி தெரியவருகின்றது. மனுதாரர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தூண்டுதலால் 1வது எதிர்மனுதாரர் பணம் ரூ.15 லட்சம் கேட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் நேரடியாக வரதட்சணையாக ரூ.15 லட்சம் கேட்டதாக சாட்சியம் அளிக்கப்படவில்லை.

iv) மேலும் 05.12.2021 ஆம் தேதி எதிர்மனுதாரர், மனுதாரர் வீட்டில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:34:09 +0530

சென்று மனுதாரரை தாக்கி கழுத்தை இறுக்கி இளவர் ஜானுஸ்ரீ–யை நீண்ட தூரம் இழுத்து சென்றார்கள் எனவும் இது சம்பந்தமாக மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக ம.சா.ஆ.12 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வு சம்பந்தமாக புகைப்படங்கள் ம.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

v) எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட தனிநபர் சாட்சி எ.ம.சா.4 தனது சாட்சியத்தில் மனுதாரர் 1–வது எதிர்மனுதாரரிடையே பிரச்னை சம்பந்தமாக தனக்கு நேரடியாக தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

vi) மேலும் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி 1–வது எதிர்மனுதாரர் கிருஷ்ணகிரி, மண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சிகள் அடிப்படையில் தெரியவருகின்றது மேலும் மேற்படி வழக்கு HMOP NO.180/2022 ஆக விசாரிக்கப்பட்டு சுகஸ்ரீ என்ற பெண்ணை 2–வது திருமணம் செய்துகொண்டதால் தள்ளுபடி ஆனது என ம.சா.ஆ.20 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. மேலும் மனுதாரரின் குறுக்கு விசாரணையில் "எனது கணவர் 28.06.2023 ஆம் தேதி சுகஸ்ரீ என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட காரணத்தால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்." என சாட்சியம் அளித்துள்ளார்.

vii) எனவே மனுதாரரை 1–வது எதிர்மனுதாரர் ரூ.15 லட்சம் பணம் கேட்டது சம்பந்தமாகவும் மற்ற பெண்கள் போல் அழகாக இல்லை என ஆபாசமான வார்த்தைகளால் புண்படுத்தி அடித்தது சம்பந்தமாகவும் மேற்படி சாட்சிகள் அடிப்படையில் தெரியவருகின்றது.

viii) கணவர் என்ற முறையில் பராமரிக்க எதிர்மனுதாரர் கடைமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மனுதாரர் சாட்சி ம.சா.3 சாட்சியத்தின் படி தற்போது 1–வது எதிர்மனுதாரர் சரஸ்வதி மருத்துவமனையில் வேலைசெய்வதாகவும் அவரது ஊதிய பட்டியல் ம.சா.ஆ.18 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ம.சா.3 தனது சாட்சியத்தில் ம.சா.ஆ.18 காண்பிக்கப்பட்டுள்ள எதிர்மனுதாரருக்கு உண்டான போக்குவரத்து மற்றும் பொருட்கள் தொகைகளை உள்ளடக்கம் என சாட்சியம் அளித்துள்ளார் மேலும் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தற்காலிக

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:34:15 +0530

பணியாளராக 3 மாதங்கள் மட்டும் பணிபுரிந்தார் என சாட்சியம் அளித்துள்ளார். எனவே எதிர்மனுதாரரின் மாத வருமானம் மாதம் 24,000/- சம்பாதிப்பதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி சம்பளத்தை நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் எதிர்மனுதாரர் சொந்தமாக 8 1/2 ஏக்கர் நிலம் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் தனக்கு 2 ஏக்கர் நிலம் எம்.சவுளூரில் உள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி நிலம் சம்மந்தமாக ம.சா.ஆ.21 கிரைய ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு அடிப்படையில் எதிர்மனுதாரர் B.E படித்துள்ளார் எனவும் திருமணத்தின் போது பெங்களூரில் வேலையில் இருந்தார் என தெரியவருகின்றது. எனவே எதிர்மனுதாரர் மாத சம்பளம் மற்றும் நிலத்தில் வருமானம் மூலம் மாதம் 30,000/- சம்பாரிப்பார் என இந்நீதிமன்றம் கருதுகின்றது..

ix) மேலும் HMOP No.51/2024 வழக்கில் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம் IA NO 03/2024 நாள் 21.11.2024 -ன் இடைக்கால ஜீவனாம்சமாக மனுதாரர் மற்றும் இளவர் ஜானுஸ்ரீ, லத்தீஷ் ஆகியோர்களுக்கு மாதம் ரூ.6000/- வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி தெரியவருகின்றது. மேலும் மேற்படி உத்தரவு நிலுவையில் உள்ளது பற்றியும், மேற்படி HMOP No.51/2024 வழக்கு நிலுவையில் உள்ளது பற்றியும் மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை. மேலும் இந்நீதிமன்ற ஜீவனாம்சம் மனு எண்:03/2022 மனுவில் மனுதாரருக்கு மாதம் ரூபாய் 3000/- மற்றும் இளவர் ஜானுஸ்ரீ மற்றும் இளவர் லித்திஸ் தலா மாதம் ரூ.3500/- வழங்கவும் மொத்தம் ரூ.10,000/- ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி இரு ஜுவானாம்ச உத்தரவுகளையும் கருத்தில் கொண்டு வழக்கு ஜீவனாம்ச உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

x) 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை கொடுமை செய்தாக மனுதாரர் தரப்பில் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு தீர்வு காண்கிறது.

1. மனுதாரருக்கு 1-வது எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.2000/- வழங்க வேண்டும் என்றும், மேற்படி ரூ.2000/- ஒவ்வொரு மாதமும்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:34:21 +0530

05–ம் தேதி மனுதாரருக்கு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த நாளிலிருந்து உத்தரவு நாள் வரையிலும், உத்தரவு நாளிலிருந்து பிரதி ஆங்கில மாதம் 05 –ம் தேதிக்குள் வரைவோலையாகவோ அல்லது மனுதாரரின் வங்கி கணக்கு மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மனுதாரர் வசம் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரரை, 1–வது எதிர்மனுதாரர் சண்டையிட்டு அடித்து காயப்படுத்தினால் மருத்துவ சிகிச்சைக்காக மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ரூ. 50,000/– நஷ்ட ஈடு பிரிவு 22–ன் கீழ் வழங்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்து இன்று இந்த உத்தரவு 2026–ம் ஆண்டு மே மாதம் 05–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:34:27 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
பாலக்கோடு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | ம.சா.1 | : திருமதி. மங்கம்மாள் |
| 2. | ம.சா.2 | : திருமதி. ஜானகிதேவி, SSI. AWPS.கிருஷ்ணகிரி |
| 3. | ம.சா.3 | : திரு. சபரி, CEO, சரஸ்வதி மருத்துவமனை, கிருஷ்ணகிரி |

**மனுதாரர் தரப்பு ஆவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ம.சா.ஆ.1 | : 12.09.2018–ம் தேதியிட்ட திருமண பத்திரிக்கை – நகல் |

| | | | |
|---|---|---|---|
| 2. | ம.சா.ஆ.2 | : | எதிர்மனுதாரர், மனுதாரர் மீது கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை மீட்டமைவு கோரி தாக்கல் செய்த மனுவின் நகல் |
| 3. | ம.சா.ஆ.3 | : | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் – நகல் |
| 4. | ம.சா.ஆ.4 | : | மனுதாரரின் பிறப்பிட சான்றிதழ் – நகல் |
| 5. | ம.சா.ஆ.5 | : | முதல் குழந்தை ஜானுஶ்ரீயின் ஆதார் அட்டை – நகல் |
| 6. | ம.சா.ஆ.6 | : | 12.05.2020–ம் தேதியிட்ட முதல் குழந்தை ஜானுஶ்ரீயின் பிறப்பு சான்றிதழ் – நகல் |
| 7. | ம.சா.ஆ.7 | : | 22.10.2021–ம் தேதியிட்ட 2–வது குழந்தை லிதிஸ்–யின் பிறப்பு சான்றிதழ் – நகல் |
| 8. | ம.சா.ஆ.8 | : | 1–ம் எதிர்மனுதாரரின் மாதசம்பளம் ரசீது – நகல் |
| 9. | ம.சா.ஆ.9 | : | 11.04.2021–ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் பணியாணை – நகல் |
| 10. | ம.சா.ஆ.10 | : | 24.11.2019–ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1–ம் எதிர்மனுதாரர் மீது கொடுத்த புகார் மற்றும் மனு ஏற்பு ரசீது – நகல் |
| 11. | ம.சா.ஆ.11 | : | 19.02.2020–ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனுதாரர், 1–ம் எதிர்மனுதாரர் மீது கொடுத்த புகார் – நகல். |
| 12. | ம.சா.ஆ.12 | : | 05.12.2021–ம் தேதி மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரர் 1–ம் எதிர்மனுதாரர் மீது கொடுத்த புகார் – நகல் |
| 13. | ம.சா.ஆ.13 | : | 24.12.2021–ம் தேதியிட்ட முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனுதாரர், 1–ம் எதிர்மனுதாரர் மீது கொடுத்த புகார் மற்றும் அஞ்சல் ரசீது – நகல். |
| 14. | ம.சா.ஆ.14 | : | 27.01.2022–ம் தேதியிட்ட தருமபுரி, காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனுதாரர், எதிர்மனுதாரர் மீது கொடுத்த புகார் – நகல் |
| 15. | ம.சா.ஆ.15 | : | 18.08.2021–ம் தேதியிட்ட நகை கடன் ரசீது (எண்ணிக்கை–3) – நகல் |
| 16. | ம.சா.ஆ.16 | : | புகைப்படம் நகல் மற்றும் சிடி |

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:34:34 +0530

17. ம.சா.ஆ.17 : 1–ம் எதிர்மனுதாரரின் கைப்பேசி எண்ணின் அழைப்பாணை விபரம் பட்டியல் – நகல்

18. ம.சா.ஆ.18 : கிருஷ்ணகிரி, சரஸ்வதி மருத்துவமனை எதிர்மனுதாரர் ஊதியம் பெறுவதற்கான நிறுவனத்தின் லேஜர் பதிவேடு(14 எண்ணிக்கை) – சான்றிட்ட நகல்

19. ம.சா.ஆ.19 : ம.சா.2–க்கு கிருஷ்ணகிரி, சரஸ்வதி மருத்துவமனையால் வழங்கப்பட்ட Authericiation Letter – அசல்.

20. ம.சா.ஆ.20 : கிருஷ்ணகிரி குடும்பநல நீதிமன்ற OP No.180/2022 வழக்கின் உத்தரவு – சான்றிட்ட நகல்.

21. ம.சா.ஆ.21 : கிரைய ஆவணம் எண்.2493/2021, பாலக்கோடு SRO

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**

1. எ.ம.சா.1 : திரு.மாரிமுத்து
2. எ.ம.சா.2 : திரு.கண்ணு
3. எ.ம.சா.3 : திரு.மாரியப்பன்
4. எ.ம.சா.4 : திரு.திருப்பதி

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் – இல்லை</u>**

1. எ.ம.சா.ஆ.1 : 16.06.2022–ம் தேதியிட்ட சமதான முச்சோலிக்கா சான்றிட்ட நகல்

2. எ.ம.சா.ஆ.2 : கிருஷ்ணகிரி, மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றIA No.03/2024 in OP No.51/2024 –ன் இடைகால ஜீவனாம்சம் உத்தரவு சான்றிட்ட நகல்.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.05 06:34:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
பாலக்கோடு.